1981 பிப்ரவரி 27]

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மறிக்குளத்தின் உபரி நீரை சடையநேரி குளத்திற்கு வடிய வைக்கும் திட்டம் பொருளாதார ரீதியில், பயன் தரத்தக்க திட்டம் இல்லை என்ற காரணத்தால் கைவிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே உள்ள பல்வேறு நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்கிற காரணத்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இத் திட்டம் ஆய்வு செய்ததற்குப் பிறகு அரசு முடிவு செய்யும்.

வென்பாவூரில் பாசன ஏரி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 297—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் வெண்பாவூர் அருகே பாசன வசதிக்காக ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் வேண்பாவூர் அருகே ஏரி ஒன்று அமைப்பதற்குத் தேவையான முதன் நிலை ஆய்வுகள் (Prelimiuary investigation) நடத்தப்பட்டன என்றும், இத்திட்டத்திற்கு சுமார் 80 ஏக்கர் வனத்துறை நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டியிருப்பதாலும், பொருளாதார ரீதியில் பயன்தரக்கூடிய திட்டமாக இல்லாத காரணத்தாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது என்றும் சிறு பாசனத் தலைமை பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காட்டிலாக்காவிலிருந்து தேவைப்படுகிற நிலத்தைப் பெற்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற செய்திக்கு நன்றி. பொதுமக்களுக்கு—குறிப்பாக அந்தப் பகுதியில் வாழ்கிற பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயன்படும் என்பதால், காட்டிலாகாவிலிருந்து சலுகை விலையில் அந்த நிலத்தைப் பெற்று, பொதுப்பணித்துறை அந்த ஏரித் திட்டம் நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அது குறித்து வனத்துறையோடு கலந்து பேசி, தேவைப்படுமானால் மறு ஆய்வு செய்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

ஆத்தூர் தொகுதியில் பாசனத் திட்டங்கள்.

*வினா எண். 298—திரு. ஆ. வெள்ளச்சாமி : மாண்புமிகு நீர் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் எந்த எந்தப் பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன? என்ன என்ன திட்டங்கள் ஆய்வில் உள்ளன ?

(ஆ) ஆய்வில் உள்ள திட்டங்கள் எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் ஏற்கனவே ஒப்புதல் அளித்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் ஏதுமில்லை. ரூ. 35·50 லட்சம் மதிப்பீட்டில் சின்னக் கோம்பையாறு குறுக்கே கூடல்வாவி கிராமத்தில் ஏரி அமைத்தல், ரூ. 7 லட்சம் மதிப்பீட்டில் கேசவரம்பட்டி கிராமத்தில் கதிரியங்குளம் ஏரி உபரிநீரை திருப்பி விடுதல் மற்றும் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் ரூ. 50,000 மதிப்பீட்டில் குட்டை அமைத்தல் ஆகிய மூன்று திட்டங்கள் தலைமைப் பொறியாளர் மற்றும் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக்கோம்பையாறு குறுக்கே கூடல்வாவி கிராமத்தில் ஏரி அமைத்தல், ஆலமரத்துப்பட்டி கதிரியங்குளம் ஏரி அமைத்தல் ஆகியவை பரிசீலனையில் உள்ளன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை நல்ல முறையில் பரிசீலித்து, விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கிறது என்று சொன்னாலே நல்ல முறையில் பரிசீலிக்கிறது என்றுதான் அர்த்தம். அத் திட்டத்தை, விரைவாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தின் பாசன வசதிகளைக் குறித்து ஆராய்வதற்காக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கருத்தரங்கு ஒன்றை 6 மாதத்திற்குள் நடத்தலாம் என்று முன்பு அமைச்சர் அவர்கள்